# இஸ்லாமியரின் ஸகாத் நடைமுறையும் இந்துக்களின் விருந்தோம்பற் கோட்பாடும்

[1]ந. சுபராஜ், [2]சே. ரதிதேவி

[1,2]Department of Languages, South Eastern University of Sri Lanka

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைக்கால சமுதாயப் பழக்கவழக்கங்களிலே விருந்தோம்பல் மிகவுயர்ந்த அறமாகத் திகழ்ந்தது. விரும்பி ஒருவர்க்கு ஈயும் முறைகளை இஸ்லாம் மற்றும் இந்து மதங்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. அவை முறையே ஸகாத் மற்றும் விருந்தோம்பல் என்பனவாகும். சுட்டப்படும் பெயர்கள் வேறுபாடுடையனவாகக் காணப்படுகின்ற போதிலும் மனிதனின் தேடும் உள்ளத்தால் வாடும் மனமறிந்து மாற்ற நினைப்பதும் உதவுவதும் இவ்விரு கோட்பாடுகளினதும் முக்கிய அம்சங்களாக அமைந்துள்ளன. ஸகாத் என்பது ஒருவரது செல்வத்தில் பிறருக்கென அல்லாஹ் விதியாக்கிய ஒரு குறித்த விகித அளவென இஸ்லாம் கூறுகின்றது. அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினருக்கு அது பகிர்ந்தளிக்கப்படும். செல்வத்திலிருந்து இவ்வாறு வேறாக்கப்படும் பகுதி அல்லது அளவு ஸகாத் என கூறப்படுவதற்குக் காரணம் அது செல்வத்தை அதிகரிக்கச் செய்வதோடு அதற்குரிய செல்வந்தனின் உள்ளத்தையும் தூய்மைப்படுத்துகின்றது. இதுபோல் இந்து சமயத்தின் முக்கிய பண்பாடான விருந்தோம்பல் ஒருவர்க்கு உணவளித்தல் எனும் முறையில் உற்றுநோக்கப்படுகின்றது. அதன் உள்ளார்ந்த வெளிப்பாடுகளை ஆராயுமிடத்து இஸ்லாத்தின் ஸகாத்துடன் ஒன்றிணைந்த போக்கினையே கொண்டமைகிறது. பொதுவான விருந்தோம்பல் நடைமுறைகளிலிருந்து விலகி பெரும் கோட்பாடாக இயங்கிக் கொண்டிருக்கும் இஸ்லாமியர்களின் ஸகாத் முறை இந்துக்களின் விருந்தோம்பல் நியமங்களை ஒத்ததாக அமைகின்றனவா? என்பதும் இவ்விரு நடைமுறைகளினதும் அடிப்படை நோக்கங்கள் ஒரே தன்மைகளைக் கொண்டனவா? என்பதும் ஆய்வுப் பிரச்சினைகளாக அமைந்தன. இவ்விரு நடைமுறைகளின் உள்ளாந்த ஒத்த தன்மைகள் மற்றும் இவற்றின் ஒரே தன்மையான நோக்கங்கள் இதுவரை ஆராயப்படவில்லை எனும் ஆய்வு இடைவெளியை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இந்துக்களின் விருந்தோம்பற் சிந்தனைகளை அடையாளங் காண்பதோடு ஸகாத் கோட்பாட்டின் அடிப்படைகளை இனங்காணல் மற்றும் இவ்விரு கோட்பாடுகளிலும் உள்ள ஒத்த இயல்புகளை மதிப்பிட்டு அவை சமூக விழுமியங்களில் பெறும் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தல் என்பன ஆய்வின் நோக்கங்களாகும். இவ்வாய்வில் ஒப்பீட்டு விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்படவுள்ளன. இரங்கும் மனம், பகிர்ந்தளிக்கும் பாசம், தொண்டு செய்யும் குணம் என்பவற்றை இவ்விரு மதங்களும் ஸகாத் மற்றும் விருந்தோம்பல் என்பவற்றின் வாயிலாக மக்கள் மனதிலே ஆழமாக பதியச் செய்கின்றன.

**திறவுச் சொற்கள்:** ஸகாத், இந்துக்களின் விருந்தோம்பல், வறியவர், ஈகை

## அறிமுகம்

பண்டைக்கால சமுதாயப் பழக்கவழக்கங்களிலே விருந்தோம்பல் மிகவுயர்ந்த அறமாகத் திகழ்ந்தது. மனித வாழ்வின் அத்தியாவசியத் தேவைகள் உணவு, உடை, உறையுள் என்பனவாகும். இவற்றிலே உணவு முதன்மையானது. இவ்வுலகில் மிகக் கொடுமையான விடயமாக பசி காணப்படுகிறது. அதனைக் கலைவதற்கே விருந்தோம்பல் அறம் தோற்றுவிக்கப்பட்டது. விருந்தோம்பல் என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் Hospitality என்பதாகும். விருந்தோம்பல் என்பதற்கு கழகத் தமிழகராதி **“புதிதாய் வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரிக்கை நடத்துவது”** எனச் சுட்டுகிறது.

இந்துக்களின் தலைசிறந்த பண்பாடுகளில் விருந்தோம்பலும் ஒன்றாகும். இந்துக்களின் வர்ணாச்சிரம தர்ம நெறியிலே கிருகஸ்த நிலையிருப்போரின் மிக முக்கிய கடமையாக விருந்தோம்பல் சுட்டப்படுகின்றது. இல்லற நிலையிலே பெண்கள் தமது இல்லத்திற்கு

வருவோரை இன்முகத்துடன் வரவேற்று இனிய அமுதினைப் படைத்ததை இந்து மூலங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.

“இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான் கண்ணே உள” என்பதற்கேற்ப இல்லையென இரந்து வந்தவருக்கு இல்லை என்னாமல் இயன்றதைத் தருவதே ஈகை எனும் கொடையாகும். மனிதர்களுக்குரிய இச்சிறப்பான பண்பினை தொன்று தொட்டு இன்று வரை காணக்கூடியதாக உள்ளது. காலம், நேரம் கருதாது ஒருவரது உள்ளக் கிடக்கையை குறிப்பாலுணர்ந்து தக்க சமயத்திலே உதவுவதை எல்லா மதங்களும் சிறப்பான முறையிலே எடுத்துரைக்கின்றன. ஈரம் நிறைந்த உள்ளத்தால் பிறர் விழிநீரையும் மன வலியையும் துடைக்கும் இச் செயற்பாட்டை இஸ்லாம் மற்றும் இந்து சமயம் என்பன சிறப்பித்துக் காட்டுகின்றன. திருவள்ளுவர்,

*“வறியவர்க்கென்று ஈவதே ஈகை மற்றெல்லாம்*
*குறியெதிர்பை நீராது உடைத்து”*

என்ற குறட்பா வாயிலாக ஒருவருக்கு விரும்பி அளிக்கும் பண்பே கொடையாகும் என்றுரைத்துள்ளார். இவ்வாறு விரும்பி ஒருவர்க்கு ஈயும் முறைகளை இவ்விரு மதங்களும் இருவேறு கோட்பாடுகள் மூலமாக தெளிவாக எடுத்துரைக்கின்றன. அவை முறையே ஸகாத் மற்றும் விருந்தோம்பல் என்பனவாகும். மனிதனின் தேடும் உள்ளத்தால் வாடும் மனமறிந்து மாற்ற நினைப்பதும் உதவுவதும் இவ்விரு கோட்பாடுகளினும் மிக முக்கிய விடயங்களாக அமைந்துள்ளன. இறைவனால் அளிக்கப்பட்ட அருட்கொடையிலிருந்து மனிதனால் மனிதனுக்கு வழங்கப்படும் பொருட் கொடையை தெளிவான வரையறைகளுடன் இவ்விரு மதங்களும் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. அன்பான இதயம், கள்ளமில்லா நேசம், நல்லெண்ணமுடைய உள்ளம், இரக்கும் மனம், பகிர்ந்தளிக்கும் பாசம், தொண்டு செய்யும் குணம் என்பவற்றை இவ்விரு மதங்களும் ஸகாத் மற்றும் விருந்தோம்பல் என்பவற்றின் வாயிலாக மக்கள் மனதிலே ஆழமாக பதியச் செய்கின்றன.

ஸகாத் என்பது முஸ்லிம்களின் செல்வத்தில் பிறருக்கென அல்லாஹ் விதியாக்கிய ஒரு குறித்த விகித அளவாகும். அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினருக்கு அது பகிர்ந்தளிக்கப்படும். செல்வத்திலிருந்து இவ்வாறு வேறாக்கப்படும் பகுதி அல்லது அளவு ஸகாத் என கூறப்படுவதற்குக் காரணம் அது செல்வத்தை அதிகரிக்கச் செய்வதோடு அதற்குறிய செல்வந்தனின் உள்ளத்தையும் தூய்மைப்படுத்துகின்றது. அல்குர்ஆனில் ஸகாத் தெடர்பாக பின்வரும் வசனம் இக்கருத்தையே எடுத்துக்காட்டுகின்றது.

*“நபியே! அவர்களின் செல்வங்களில் இருந்து ஸகாத்தை எடுத்து அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக!”* (9:103)

இந்து சமயத்திலே விருந்தோம்பல் என்னும் பழமைக் கோட்பாடானது ஒருவர்க்கு உணவளித்தல் எனும் முறையிலேயே உற்றுநோக்கப்படுகின்றது. எனினும் அதன்

உள்ளார்ந்த வெளிப்பாடு இஸ்லாத்தின் ஸகாத்துடன் ஒன்றிணைந்த போக்கினையே கொண்டமைகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

பொதுவான விருந்தோம்பல் எனும் நடைமுறையில் இருந்து விலகி ஆழமான நியமங்களையும் ஒழுகலாறுகளையும் கொண்டதாக இந்துக்களின் விருந்தோம்பற் கோட்பாடு அமைந்துள்ளது. இதுபோல் சாதாரண விருந்தோம்பல் நடைமுறையிலிருந்து விலகி பெரும் கோட்பாடாக இயங்கிக் கொண்டிருக்கும் இஸ்லாமியர்களின் ஸகாத் முறை இந்துக்களின் விருந்தோம்பல் நியமங்களை ஒத்ததாக அமைகின்றனவா? என்பதும் இவ்விரு நடைமுறைகளினதும் அடிப்படை நோக்கங்கள் ஒரே தன்மைகளைக் கொண்டனவா? என்பதும் ஆய்வுப் பிரச்சினைகளாக அமைந்தன.

**ஆய்வு இடைவெளி**

இந்துக்களின் விருந்தோம்பற் சிந்தனைகள் தனித்து ஆராயப்பட்டுள்ளன. இந்து மூலங்களிலிருந்து அதற்கான ஆதாரங்கள் எடுத்துக்காட்டப்பட்டிருந்தன. அதுபோல் இஸ்லாமியர்களின் ஸகாத் கோட்பாடும் திருக்குர்ஆன் வாசகங்கள் மூலம் ஆராயப்பட்டுள்ளன. ஆனால் இவ்விரு நடைமுறைகளில் உள்ள ஒத்த தன்மைகள், ஒரே தன்மையான நோக்கங்கள் ஆராயப்படவில்லை. எனவே இவ் இடைவெளியைப் பூரணப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படவுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

- இந்து மத மூலங்களிலுள்ள விருந்தோம்பற் சிந்தனைகளை அடையாளங் காண்பதோடு இஸ்லாம் வலியுறுத்தும் ஸகாத் கோட்பாட்டின் அடிப்படைகளை இனங்காணல்.
- இவ்விரு கோட்பாடுகளிலும் உள்ள ஒத்த இயல்புகளை மதிப்பிட்டு அவற்றிலுள்ள விருந்தோம்பற் சிந்தனைகள் சமூக விழுமியங்களில் பெறும் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் ஒப்பீட்டு விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்படவுள்ளன. கூறவந்த விடயத்தை தெளிவாக விளக்குவதற்கும் இந்துக்களின் விருந்தோம்பல், ஸகாத் ஆகிய நடைமுறைகளில் உள்ள ஒத்த தன்மைகளை ஆராய ஒப்பீட்டு விபரண ஆய்வு முறையும் இந்து மூலங்களிலே காணப்படும் விருந்தோம்பற் சிந்தனைகளை விளக்குவதற்கும் உபபிரிவுகள் ஒவ்வொன்றிலும் கூறப்படும் விடயங்களை ஆராய்ந்து அவற்றின் முடிவுகளைக் கண்டு கொள்வதற்கு பகுப்பாய்வு முறையும் பயன்படுத்தப்படவுள்ளன.

**தரவு சேகரிப்பு முறை**

இவ்வாய்வுக்கான தரவுகள் முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமாகப் பெறப்படவுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக இந்துக்களின் மூல நூல்கள் மற்றும் திருக்குர்ஆன் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகள் யாவும் கடந்த கால ஆய்வின் தரவுகள், சஞ்சிகைகள், இதர ஆக்கங்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், இணையத்தளங்கள் என்பவற்றின் மூலம் தரவுகள் பெறப்படவுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

தியாகராஜன்,மு. அவர்களின் திருத்தொண்டர் புராணத்தில் விருந்தோம்பல் பண்பாடு எனும் ஆய்வுப் பத்திரிகை மூலமாக பெரிய புராணத்திலே விருந்தோம்பல் முறைமையினை மேற்கொண்ட நாயன்மார்கள் பற்றிய சிறு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

றாபீதுான் நளிமிய்யீன் வெளியீடாக அமையும் ஸகாத் கோட்பாடும் நடைமுறையும் எனும் நூல் இஸ்லாமியர்களின் ஸகாத் கோட்பாட்டின் அடிப்படைகளை ஆராய்கின்றது. திருக்குர்ஆன் வசனங்களை ஆதாரப்படுத்தி அதனை நிறுபனம் செய்கின்றது.

'திருக்குறள் காட்டும் வாழ்வியலில் விருந்தோம்பல்' எனும் தலைப்பில் இராமலெட்சுமி,ஆ.பா. அவர்களின் ஆய்வுப் பத்திரிகை வாயிலாக அறநூல்கள் கூறும் விருந்தோம்பல் பற்றி அறிந்து கொள்ள முடிந்தது.

ஜெனிபர்,சு. அவர்களின் அற இலக்கியங்களில் விருந்தோம்பல் எனும் ஆய்வறிக்கை அற இலக்கியங்கள் கூறும் விருந்தோம்பற் சிந்தனைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு உதவியாக அமைந்தது.

தங்கமாரி,சு. அவர்களின் விருந்தோம்பல் பண்பும் தமிழரின் மாண்பும் எனும் ஆய்வறிக்கையும் இவ்வாய்விற்குதவியாக அமைந்தது.

பெரிய புராணம் ஓர் ஆய்வு எனும் ஞானசம்பந்தன்,அ.ச. அவர்களின் நூல் வாயிலாக பெரியபுராணம் கூறும் விருந்தோம்பல் சிந்தனைகளை அறிய முடிந்தது.

சாமி. சிதம்பரனார் அவர்களின் பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் எனும் நூல் மூலமாக இவ்வாய்விற்குரிய பல தரவுகளைப் பெற முடிந்தது. விருந்தோம்பல் பற்றியும் விருந்தோம்பலில் பெண்களின் வகிபங்கு பற்றியும் பகுத்துண்ணும் தமிழர் பண்பு பற்றியும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

**ஸகாத் - விருந்தோம்பல் தொடர்புநிலைகள்**

இஸ்லாம் மார்க்கம் விருந்தினர்களுக்கு உணவளித்தல் எனும் சாதாரண நடைமுறையாக ஸகாத்தை நடைமுறைப்படுத்தவில்லை. தனித்துவமான நடைமுறைகளையும் நியமங்களையும் முன்வைத்துள்ளது. இந்துமதம் வலியுறுத்தும் விருந்தோம்பல் கோட்பாடு 'அதிதிகளுக்கு விருந்தளித்தல்' எனும் மையப்பொருளையே கொண்டுள்ளது எனும் கருத்தியலே பொதுவாக உள்ளது. உண்மையில் இந்துமதம் வலியுறுத்தும் விருந்தோம்பற் சிந்தனைகள் 'ஸகாத்' போன்று விரிவான நியமங்களையும் வழமைகளையும் கொண்டுள்ளது. அவற்றை மேல்வருந் தலைப்புகளினூடாக ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

**பகிர்ந்தளிப்போரும் பகிர்ந்தளிக்க தகுதியானோரும்**

ஸகாத் மற்றும் இந்துக்களின் விருந்தோம்பற் கோட்பாடு என்பனவற்றின் முக்கிய நோக்கமாக இருப்பது, மிகுதியாக ஒருவன் தன்னிடமிருக்கும் செல்வத்தை வறியோருக்கும், வாழ்விழந்தோருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதாகும். இதனையே திருவள்ளுவர்.

*''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோ*
*வேளாண்மை செய்தல் பொருட்டு''*

என அழகுற குறிப்பிட்டுள்ளார். அதாவது ஒருவன் வீட்டிலே இருந்து பொருட்களை காத்து இல்வாழ்க்கை நடத்துவது, விருந்தினர்களை உபசரிக்கை செய்து உதவி செய்யும் பொருட்டேயாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். மனிதன் தன்னிடத்தே மேலதிகமாக காணப்படும் செல்வம் உட்பட பிற பொருட்களை தானமாக வழங்க வேண்டும் என்பதையே தைத்திரிய உபநிடதத்தின் சீஷா வல்லி பகுதியும் எடுத்துரைக்கின்றது.

இஸ்லாம், ஒருவரது எவ்வாறான நிலையிலே ஸகாத் வழங்கப்பட வேண்டும் என்பதையும் அவ்வாறு வழங்கப்படுபவரது மனநிலை எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பதை கூறவிழையும் போது,

*''ஸகாத் விதியாகும் பொருளை அதற்குரிய ஸகாத் விதியாகும் அளவில் சொந்தமாகப் பெற்றுள்ள பருவ வயதை அடைந்த சித்த சுவாதீனமுள்ள சுதந்திரமான முஸ்லிமின் மீது குறித்த பொருளுக்குரிய ஸகாத் தொகையை வழங்குவது கடமையாகும்''*

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸகாத் வழங்கும் ஒருவன் மனத்தூய்மையுடன் திருப்தியுடன் காணப்பட வேண்டும். 'இறைவனுக்காக' எனும் உன்னத நோக்கத்தினைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்துக்கள் போதும் என்ற மனத்திருப்தியுடன் மேலதிகமான பொருளை இறைவனுக்காக என அர்ப்பணித்து விருந்தோம்பலை மேற்கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனையே இந்துக்கள் *''மக்கள் சேவையே மகேசன் சேவை''* என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். விருந்தோம்பலை மேற்கொள்ளும் ஒருவன் பின்வரும் பண்புகளை கொண்டமைந்திருக்க வேண்டும் என தைத்திரிய உபநிடதம் சுட்டிக்காட்டுகின்றது.

- ஈடுபாட்டுடன் நம்பிக்கையுடன் தானம் செய்ய வேண்டும்.
- நம் சக்திக்கேற்ப தானம் செய்ய வேுண்டும்.

ஒரு இஸ்லாமியன் ஸகாத்திற்கு வழங்கும் பொருட்கள் பற்றிய விடயங்களை இஸ்லாம் ஐந்து வரையறைகளிலே எடுத்துரைக்கிறது. அந்தவகையிலே,

1. தானியங்கள் - அரிசி, நெல், கோதுமை
2. கால்நடைகள் - ஆடு, மாடு, ஒட்டகம்
3. பழங்கள்
4. வியாபாரப் பொருட்கள்
5. தங்கம், வெள்ளி, பணம்

என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. இவை தகுந்த அளவிலே தகுதி வாய்ந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பது இஸ்லாமியர்களின் கொள்கையாகும்.

இந்துக்களிடையே கொடை எனும் போது வரையறையற்ற வகையிலே பொருட்கள் வழங்கப்படுகின்றன. வேத காலம் தொட்டு பசுக்கள் செல்வமாக கருதி தானமாக வழங்கப்பட்டன. அத்தோடு யாகத்தின் பலனாக தானியங்கள், பழங்கள் மற்றும் ஆடை ஆபரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டமை முக்கியமானதாகும். கொடையில் சிறந்த கர்ணன் தனது பாதுகாப்பிற்குப் பாத்திரமான கவச குண்டலங்களையே தானமாக வழங்கியமை கொடைப் பொருட்களின் எல்லையற்ற தன்மையினை விளக்குகின்றது.

ஸகாத் எனும் புனித பொருளை பெருவதற்கு தகுதியுடையவர்களை இஸ்லாம் வரையறை செய்துள்ளது. ஒருவரது தகுதிநிலை, வாழ்க்கை முறை என்பனவற்றின் அடிப்படையிலே இது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

***"ஸகாத் என்னும் தானங்கள் பக்கீர்களுக்கும் மிஸ்கீன்களுக்கும் அதன் உத்தியோகத்தர்களுக்கும் இஸ்லாத்தின்பால் இணக்கமானோருக்கும் அடிமைகளை விடுதலை வெய்வதற்கும் கடனில் மூழ்கியவர்களுக்கும் அல்லாஹ்வுடைய பாதையில் போராடுவதற்கும் வழிப்போக்கர்களுக்கும் உரித்தானதாக அல்லாஹ் ஏற்படுத்திய கடமையாகும். அல்லாஹ் மிக அறிந்தோனும் ஞானமுடையோனுமாயிருக்கிறான்."( 9:58 60)***

அந்தவகையிலே மேலே குறிப்பிடப்படும் எண்மரும் வருமாறு,

1. பக்கீர் - தனது நாளாந்த அத்தியாவசியத் தேவைகளைக கூட நிறைவேற்றிக் கொள்ளக் கஸ்டப்படும் பரம ஏழை
2. மிஸ்கீன் - தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையிலுள்ளவர்கள்.
3. ஸகாத் உத்தியோகத்தர் (அல் ஆமிலூன அலா அஸ்ஸகாத்) - ஸகாத் பணியில் ஈடுபட்டிருப்போர்.
4. இஸ்லாத்திற்கு இணக்கமானோர் (அல் முஅல்லபத்து குலூபுஹு)
5. விடுதலை செய்யப்பட்ட அடிமைகள் (பீ அல் ரிக்காப்)

6. கடன்பட்டோர் (அல் காரிமூன்)
7. இறை பாதையில் போராடுபவர்கள் (பீஸ பீலில்லாஹ்)
8. பிரயாணிகள்

இதனைப் போன்றே இந்து சமயத்திலும் கொடை பெறத் தகுதியானோர் விதந்துரைக்கப்பட்டுள்ளனர். அந்த வகையிலே,

1. பரம ஏழைகள், வறியவர்கள்
2. அநாதைகள்
3. கணவனை இழந்தோர்
4. பிரமச்சாரிய நிலையிலுள்ளோர்
5. உடல் ஊனமுற்றோர்
6. வயோதிபர்கள்
7. நோயாளிகள்
8. சிறைக் கைதிகளின் குடும்பங்கள்

என்போர் சுட்டிக்காட்டப்பட்டுள்ளனர். தைத்திரிய உபநிடத்திலே முதல் அத்தியாயத்திலே வேதங்களை கற்பித்த ஆச்சாரியனால்,

*“ஒருவருடைய பாத்திரம் அறிந்து தானம் செய்ய வேண்டும்”*

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு தானம் மேற்கொள்ளும் போது,

- தன்னுடைய அந்தஸ்து கர்வத்தை மறைத்து எவ்விதமான பந்தாவும் இல்லாமல் பணிவுடனும் தானம் வழங்குபவர்களிடம் மரியாதையுடனும் செயற்பட வேண்டும்.
- தானம் செய்வதில் சிரத்தை வேண்டும்

எனவும் கூறப்பட்டுள்ளது. இக்கருத்தை மேலும் விளக்கும் வகையிலே இந்துக்கள் மத்தியிலே *“பாத்திரம் அறிந்து பிச்சை இடு”* எனும் பழமொழி தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. இங்கே பாத்திரம் என்பது பிச்சைப்பாத்திரத்தை விடுத்து ஒருவரது தகுதி நிலையினையே வெளிப்படுத்தி நிற்கிறது. திருமந்திரத்திலே திருமூலர் இதனைச் சற்று ஆழமாகவே எடுத்துரைத்துள்ளார். கொடை அளிக்கின்ற செல்வர்கள் யாருக்குக் கொடையளிக்க வேண்டும் என்பதை,

*“நிலமத்தையே சிவஞானிக்கு ஈந்தால்*
*பலமுக்தி சித்தி பரயோகமும் தரும்*
*நிலமத்தனைப் பொன்னை நின்மூடர்க்கு ஈந்தால்*
*பலமும் அற்றே பரபோகமும் குன்றுமே”*

என்று குறிப்பிட்டுள்ளார்.

ஸகாத் மற்றும் விருந்தோம்பல் என்பன முறையே தனிமனித மற்றும் சமூக வாழ்விலே பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இவை தனிமனித மற்றும் சமூக ஆளுமைகளை வெளிக்கொணரும் சமய பண்பாட்டு நடவடிக்கையாக இருக்கின்றமை சிறப்பிற்குரியதாகும்.

**உலோபித் தனத்திலிருந்து தூய்மைப்படுத்தல்**

ஸகாத் ஒரு முஸ்லிமை பொதுவாக பாவ அசூசைகளிலிருந்து தூய்மைப்படுத்துவது போல அவனோடு ஒட்டிய மானசீக அசூசைகளில் ஒன்றான கஞ்சத்தனத்திலிருந்தும் தூய்மைப்படுத்துகின்றது.

> "*எவர்கள் உள்ளத்தின் உலோபித்தனத்திலிருந்து காக்கப்பட்டார்களோ அத்தகையவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள்*" (59:9)

என்ற அல்குர்ஆன் வசனம் இதனையே வலியுறுத்தி நிற்கின்றது. நபி (ஸல்) அவர்கள் உலோபித்தனத்தை அழிவை உண்டாக்கும் மூன்று செயல்களில் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்து மதத்திலே இந்துக்களிடையே காணப்படும் கஞ்சத்தனம் மிகவும் கொடூரமானது எனும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. திருவள்ளுவர்,

> "*நச்சப்படாதவன் செல்வம் நடுவூரில்*
> *நச்சு மரம் பழுத்தற்று*"

எனக் கூறி, கஞ்சன் ஒருவனது செல்வத்தை நடு ஊரிலே நிற்கும் நஞ்சையுடைய மரத்திற்கு ஒப்பிட்டு விளக்கியுள்ளார். இந்துக்கள் யாவரும் சிறந்த வள்ளல்களாக இருக்க வேண்டும் என்பதை திருமூலர் மேல்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "*ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்பின்*
> *பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்*
> *வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்*
> *காக்கை கரைந்துண்ணும் கதலம் அறிமினே*"

இப்பாடலில் "நல்லவர் தீயவர் என்ற தகுதி வேறுபாடின்றி யாவர்க்கும் இடுங்கள். உண்ணுங் காலத்தில் விரையச் சென்று உண்ணாது விருந்தினர் வருகையை எதிர்பார்த்து பின்பு உணணுங்கள். காக்கைகள் தமக்கு கிடைத்த உணவை உண்ணும் பொழுது தன் இனத்தையும் சேர்த்து உண்ணுதலைக் காணுங்கள்." எனக் கூறி மனிதனும் பிறருக்கு கொடுத்துண்ண வேண்டுமெனவும் அனைவருக்கும் கொடுத்து வாழ வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**செலவு செய்யப் பயிற்றுவித்தல்**

ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் கட்டளைப்படி ஸகாத்தை உரிய நேரத்தில் கொடுப்பதை வழக்கப்படுத்திக் கொள்ளும் போது அது அவனுடைய வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஓர் அடிப்படைப் பண்பாகிறது. அதன் மூலம் அவன் தன்னிடம் தாராள குணத்தை

உருவாக்கிக் கொள்கின்றான். இவ்வுயர் பண்பை அல்லாஹ் தனக்கு அஞ்சிய இறைவிசுவாசிகளின் சிறப்புக் குணங்களில் ஒன்றாக அல்குர்ஆனில் இயம்பியுள்ளான்.

*"இது (அல்லாஹ்வின்) திருவேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. பயபக்தியுடையோருக்கு இது நேர் வழிகாட்டியாகும். (பயபக்தியுடைய) அவர்கள் (புலன்களுக்கு எட்டா) மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள். தொழுகையை (உறுதியாக) கடைப்பிடித்து ஒழுகுவார்கள். இன்னும் நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (நல்வழியில்) செலவும் செய்வார்கள்" (2:1 – 3)*

இதனை இந்து சமயம் அழகுற வெளிப்படுத்துகிறது. பெரிய புராணத்திலே தமது செல்வங்கள் எல்லாம் அழியும் நிலையிலும் அடியார்க்கு சேவைகள் பல செய்த இளையான்குடிமாற நாயனார் கதை இதற்குச் சிறந்த உதாரணமாகும். இளையான் குடி நாயனார் உழுதுண்டு பொருளீட்டியவர். அடியார்பால் தளராத அன்பு கொண்டவர். தம்மை தேடி வரும் அடியார்கள் யாராகினும் வரவேற்று உபசரிப்பார். வரவேற்கும் வரவேற்கும் முறையைக் சேக்கிழார்,

*"நேர வந்தவர் யாவர் ஆயினும் நிமித்த மாகிய பக்திமுன்*
*கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்றுசெவிப் புலத்து*
*ஈரம் மென்மதுரப்ப தம் பரிவெய்த முன் னுரை செய்தபின்"*

என்ற பாடலின் வாயிலாக கூறுகின்றார். மேலும் விருந்தினரை உபசரிக்கும் முறையை,

*"கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே*
*மண்டு காதலின் ஆச னத்திடை வைத்தருச்சனை செய்தபின்*
*உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத்திறனில் ஒப்பிலா*
*அண்டநாயகர் தொண்டர் இச்சையிலமுதுசெய்ய அளித்துள்ளார்"*

என வரும் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**இறைவனின் குணத்தை அணிகலனாகப் பெறல்**

இஸ்லாத்தில் ஸகாத் செய்வதன் மூலமாக மனிதன் உலோபித்தனத்திலிருந்து தூய்மையடைந்து தாராள குணத்தைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் போது 'ரப்பானிய்யத்' எனும் முழுமைத்துவம் பெற்ற தெய்வீகப் பண்பினை நோக்கி நெருக்கமடைவதாக கூறப்பட்டுள்ளது. புண்ணியம், கருணை, தயாளம், கொடை என்பன பிரதிபலன் கருதாது வாரி வழங்கும் அல்லாஹ்வின் பண்புகளில் சிலவாகும். மனிதன் இப்பண்புகளைத் தன்னால் இயன்றவரை பெற முயல்வது அவனை இறை நெருக்கத்திற்கு இட்டுச் செல்லக் கூடியதாகும்.

இந்து சமயமும் இக்கருத்தை மிகவும் வலியுறுத்தியே கூறுகிறது. சைவசித்தாந்த நூல்களில் ஒன்றான சிவஞான சித்தியாரில் சாதனை இயல் எனும் பகுதியிலே இச்செய்தி கூறப்பட்டுள்ளது. சிவநெறி மெய்யறிவாளர்களிடம் கொடுத்த பொருள் சிறிதே ஆயினும் அது நிலமும் மலையும் போல மிக்க ஓங்கி நன்மை பயப்பதால் மேலாகிய

இறை நெறியின் வழி கிட்டும் பேரின்பங்களை நுகரச் செய்து, உயிர்களை பிறப்பு, இறப்பு எனும் துன்பக்கடலில் விழா வண்ணம் காத்து, அறியாமையை நீக்கி, உயர்ந்த தவம் பெருகும் சான்றோரிடம் சேர்ப்பித்து, உலக இன்னல்கள் நீங்கி, எண்ணியவை உடனே நிறைவேறி, இறுதியில் உண்மையான மெய்நெறியினையும் மெய்யறிவையும் கூட்டுவித்துப் பெருமானின் திருவடிப் பேற்றினை கூட்டுவிக்கும் என்பதனை மேல்வருமாறு இயம்பியுள்ளார்.

*''சிவஞானச் சொல்லுடையோர் கையில் தானம்*
*திலம் அளவே செய்திடினும் நிலம் மலைபோல்*
*திகழ்ந்து பவமாய்க் கடலின் அழுந்தாவகை யெடுத்து*
*பரபோகம் துய்பித்துப் பாசத்தை அறுக்கத்*
*தவம் ஆழும் பிறப்பு ஒன்றின் சாரப் பண்ணி*
*சரியை கிரியை யோகம் தன்னிலும் சாராமே*
*நவமாகும் தத்துவ ஞானத்தை நல்கி*
*நாதன் அடிக்கமலங்கள் நணுகுவிக்கும் தானே''*

### செல்வத்தை விருத்தியடையச் செய்தல்

ஸகாத் கொடுப்பவனின் செல்வத்தில் அதிகரிப்பையும் அபிவித்தியையும் உண்டாக்குகிறது. இதனை,

*''நீங்கள் எந்தப் பொருளை ( அல்லாஹ்வின் பாதையில்) செலவு செய்த போதிலும் அவன் அதற்குப் பிரதிபலன் அளிக்கின்றான்'' (34:39)*

*''அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி ஸகாத்தாக எதை நீங்கள் கொடுக்கிறீர்களோ( அது அல்லாஹ்விடம் பெருகும்) அவ்வாறு கொடுப்போர் தாம் தம் நற்கூலியை இரட்டிப்பாக்கிக் கொள்வர்''*

போன்ற அல்குர் ஆன் வசனங்கல் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்துக்களிடையே வெல்வத்தை மனநிறைவுடன் ஒருவருக்கு கொடுப்பதனால் அவன் மேலும் மேலும் செல்வந்தனாகிறான் என்ற கருத்தியல் தொன்று தொட்டு நிலவி வருகின்றது. கொடையினாலே உயர்ந்த கர்ணனை மகாபாரதம் கொடையின் அரசனாக கூறுகின்றது.

### உலக ஆசைகளிலிருந்து உள்ளத்திற்கு பாதுகாப்பளித்தல்

அல்லாஹ்வுக்காகவும் மறுமைக்காகவும் மனிதன் ஆற்ற வேண்டிய கடமைகளை ஸகாத் உள்ளத்திற்கு உணர்த்துகின்றது. பொருளாசை, உலகாசை போன்றவற்றில் மூழ்கிவிடாமல் அது மனிதனைக் காப்பாற்றுகின்றது. இத்தகைய பேராசைகள் விசுவாசியின் உள்ளத்தில் புகுந்து விட்டால் அங்கே இறை அன்பிற்கு இடமிருக்காது. இறை வழிபாடுகளில் அலட்சியத்தை ஏற்படுத்தும். மறுமையை மறக்கடிக்கச் செய்யும்.

ஆனால் அவன் தனது செல்வத்தில் ஒரு பகுதியை பிறர் நலனுக்காக செலவு செய்யும் போது அவனுடைய உள்ளம் பேராசை என்ற நோயிலிருந்து மீட்சியடைகிறது என்பதே இஸ்லாமியரின் கொள்கையாகும்.

திருமூலர், திருமந்திரத்திலே செல்வத்தை உரியவர்களுக்கு ஈயாதவர்களுக்கு இன்ன நோய் என்று அறிய முடியா வகையிலே பலவித நோய்கள் வந்து சேரும் என்பதை,

*''இருமலும், சோகையும், ஈளையும், வெப்பும்*
*தரும் பெய்யாதவர் தம்பால் வாகும்*
*உருமிடி நாகம் உரோணி கழலை*
*தருமஞ் செய்வார் பக்கல் சாராகிலாவே''*

என்ற பாடல் வாயிலாக குறிப்பிட்டு, ''மக்களே இருக்கும் போதே அனைவருக்கும் விருந்தோம்பல் மேற்கொள்ளுங்கள், இல்லையெனில் துன்பமயமான வாழ்வே அமையும்'' என்கின்றார். இக்கருத்தினை ஒட்டியே திருநாவுக்கரசரும் பின்வருமாறு பாடியுள்ளார்.

*''இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈயாதவருக்கு அருளும் வைத்தார்*
*சுரப்பவர் தங்கட்கெல்லாம் கரு நகரங்கள் வைத்தார்''*

இப்பாடல் வாயிலாக இரப்பவர்களுக்கு கொடுத்தால் சிவபெருமானின் கருணையும் ஈயாதவர்களுக்கு கடுமையான நரகமும் கிடைக்கும் என கூறுகிறார்.

**முடிவுரை**

இஸ்லாம் மார்க்கம் விருந்தினர்களுக்கு உணவளித்தல் எனும் சாதாரண நடைமுறையாக ஸகாத்தை நடைமுறைப்படுத்தவில்லை. அது தனித்துவமான நடைமுறைகளையும் நியமங்களையும் முன்வைத்துள்ளது. அதுபோல் இந்துசமயம் கூறும் விருந்தோம்பற் சிந்தனைகள் 'உணவளித்தல்' வரையறைக்குள் மாத்திரம் உட்பட்டதல்ல. உறவினர்களுக்கும் விருந்தினர்களுக்கும் விருந்தளித்தல் எனும் கருத்தியலுக்கப்பால் அது கூறும் நியமங்களும் வழமைகளும் இஸ்லாத்தின் ஸகாத்துடன் நெருங்கிய தொடர்புடைமை கொண்டதாக காணப்படுகின்றன. உண்மையில் இந்துமதம் வலியுறுத்தும் விருந்தோம்பற் சிந்தனைகள் 'ஸகாத்' போன்று விரிவான நியமங்களையும் வழமைகளையும் கொண்டுள்ளன.

விருந்தினை பகிர்ந்தளிப்போரும் பகிர்ந்தளிக்க தகுதியானோரும் பற்றிய நியமங்கள் இரு முறைகளிலும் ஒத்த தன்மைகளைக் கொண்டுள்ளன. உலோபித் தனத்திலிருந்து மனிதனை தூய்மைப்படுத்தல், செலவு செய்யப் பயிற்றுவித்தல், இறைவனின் குணத்தை அணிகலனாகப் பெறல், செல்வத்தை விருத்தியடையச் செய்தல், உலக ஆசைகளிலிருந்து உள்ளத்திற்கு பாதுகாப்பளித்தல் போன்ற நோக்கங்களிலும் இவ்விரு நடைமுறைகள் ஒத்துச் செல்கின்றன.

இஸ்லாமும் இந்து சமயமும் கொடை என்பதை ஸகாத் மற்றும் விருந்தோம்பல் என்ற வகையிலே தெளிவுற இரு கோட்பாடுகளாக எடுத்துரைக்கின்றன. இவை ஒன்றுடன் ஒன்று

தொடர்புடையனவாக அமைவது இருமதங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை வலிமைப்படுத்தும் ஸ்திரமாகச் கட்டியெழுப்பும் ஓர் அம்சமாகவே அமைகின்றது. இரு மதங்களுமே செல்வத்தை தமக்கென பேணும் அதே வேளை ஏனையோருக்கும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் வேண்டும் என்பதை தெளிவாக எடுத்துரைக்கின்றன.

## உசாத்துணைகள்


1. அகளங்கன்., (1994), பன்னிரு திருமுறை, இந்துமாமன்றம், வவுனியா.
2. அப்துஸ்ஸலாம், அபூநதீரா உமரி, (2016), திருக்குர்ஆன் - தமிழாக்கம், குர்ட்வேர்ட் புக்ஸ், சென்னை.
3. இராமலெட்சுமி, ஆ.பா., (2019. 5), திருக்குறள் காட்டும் வாழ்வியலில் லிருந்தோம்பல், தெ.தி இந்துக் கல்லூரி, நாகர் கோவில்.
4. சிதம்பரனார், சா., (2004), பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. ஞானசம்பந்தன், அ.ச., (1999), பெரிய புராணம் ஓர் ஆய்வு, கங்கா புத்தக நிலையம், தஞ்சை.
6. தங்கமாரி, சு., (2017.01.24), ஆய்வு : விருந்தோம்பல் பண்பும் தமிழரின் மாண்பும், விருதுநகர்.
7. வெள்ளைவாரணன், க., (1962), பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை.
8. ஜெனிபர், சு., (2016.11.16), ஆய்வு : அற இலக்கியங்களில் விருந்தோம்பல், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.
9. பன்னிரு திருமுறை ஆய்வு நூல் : பன்னிரு திருமுறைப்பண்பாட்டு ஆய்வு மாநாடு 2011, (2011), மாணிக்கவாசகர் பதிப்பகம், கோலாலம்பூர்.
10. றாபித்ததுன் நளிமிய்யீன் (பதி.), 1998, ஸகாத் கோட்பாடும் நடைமுறையும், றாபித்ததுன் நளிமிய்யீன், பேருவளை.
11. Yusuf, Al Qardawi,(1984), Fiquh of Zakat Volume 1. Kingdom of Saudi Arabia: King Abdul Aziz University Center for Research in Islamic Economics.
12. Ariff, Mohamed ,(1991), The Islamic voluntary sector in Southeast Asia: Islam and the economic development of Southeast Asia. Institute of Southeast Asian Studies